# மூதூர் பிரதேச சபை

# திருக்கோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 13ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 25 பெப்ரவரி 2015 இல் சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மூதூர் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்நன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகத்தின் பெறுமதி ரூபா.400,007 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ரூபா.17,615 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய 1997 ஆம் ஆண்டுக்கான தொலைபேசிக் கட்டணம் ரூபா.22,806 தொகையை செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1986 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதி, விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதி என்பவற்றிற்காக ரூபா.355,405 தொகையான பங்களிப்பு பணத்தை உரிய நிதியங்களுக்கு அனுப்பி வைக்காமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா.615,203 தொகையான நிறுத்திவைத்தல் பணத்தை உரிய நபர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) 1984 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவிவரும் ரூபா.1,218,550 தொகையான நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை.

---

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இனம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| காணிகளும் கட்டடங்களும் | 4,443,627 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் | 618,659 | நிலையான சொத்துப் பதிவேடுகள், சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| தளபாடங்கள் | 1,057,420 | |
| கடைத்தொகுதி | 20,375,659 | |
| மோட்டார் வாகனம் | 23,026,590 | |
| முற்பணப் பெறுகை | 21,872 | காலப்பகுப்பாய்வும் விபரப்பட்டியலும் |
| பொருட்கையிருப்பு | 48,588 | இருப்பு கணிப்பு அறிக்கை மற்றும் விபரப்பட்டியல் |

1.3.5 தொங்கல் கணக்கு

----------------------------------

2000 ஆம் ஆண்டு தொடக்கம் தொங்கல் கணக்கு செலவு மீதியாக ரூபா.11,594 தொகை நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை இணங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | பின்வரும் மீளளிப்பு விண்ணப்பங்கள் ஒவ்வொரு காலாண்டின் போதும் உரிய உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (i) அத்தியாயம் III இன் பிரிவு 15 உப பிரிவு 81 | i. ஆதன உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்வதற்காக பதிவாளர் நாயகத்திற்கும் திறைசேரியின் பணிப்பாளர் நாயகத்திற்கும்<br>ii. நீதிமன்றத் தண்டப்பண மீளளிப்பிற்காக நீதிமன்ற பதிவாளருக்கு |
| (ii) அத்தியாயம் IX இன் பிரிவு 180 | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.14,000,313 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம்

ரூபா.5,610,454 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.8,389,859 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2013 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 791,500 | 613,525 | 4,391,078 |
| வாடகை | 6,524,240 | 1,264,951 | 6,894,149 |
| சேவைகளுக்கான கட்டணம் | 5,289,500 | 784,312 | 86,519 |
| அரசிறை வருமானம் | 25,955,756 | 37,781,628 | 331,940 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பாக பத்து ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா.22,820,738 கிரயத்தில் 40 சந்தைக் கடைகள் 2012 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 13 கடைகள் எதுவித வாடகையும் அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 27 கடைகளும் 2014 திசெம்பர் 18 ஆம் திகதி வரை எதுவித நோக்கத்திற்கும் பயன்படுத்தாமல் காணப்பட்டன.

பிரதேச சபை செயலாளர் எனக்கு இது தொடர்பாக 06 சனவரி 2015 ஆம் திகதி இது தொடர்பாக அறிவித்தலின் பிரகாரம் 40 கடைகளுக்கும் முற்பணமாக ஒவ்வொரு கடைகளுக்கும் ரூபா.50,000 வீதம் பெறப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

3.2 ஓப்பந்த நிர்வாகம்
------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மூதூர் புதிய பேருந்து நிலையத்தின் கடைத்தொகுதி நிர்மாணம்
--------------------------------------------------------------------------------------------------------

புதிய பேருந்து நிலையத்தில் ரூபா 22,820,738 பெறுமதியான கடைத் தொகுதியின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2012 ஒக்டோபர் 30 ஆம் திகதி கட்டிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தின் சுவர்களில் வெடிப்புக்கள் காணப்பட்டதுடன் சில இடங்களில் கொங்கிறீட் வேலைகள் உரிய முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுவும் 2014 திசெம்பர் 18 ஆம் திகதி மேற்கொண்ட களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் குறைபாடுகளை கவனத்தில் கொள்ளாது மொத்த ஒப்பந்தப் பணமும் நிறுத்தி வைத்தல் பணமும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மூதூர் புதிய பேருந்து நிலையத்தின் சந்தைக் கட்டிடம்
------------------------------------------------------------------------------------------

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா.23,366,108 பெறுமதிக்கு சந்தைக் கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக மூதூர் பிரதேச சபையால் 2013 ஆகஸ்ட் 27 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக 2014 திசெம்பர் 18 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அக்கட்டிடத்தில் 350 மீற்றர் நீளமான Parapet Wall நிர்மாணிக்கப்பட்டு அதற்காக ரூபா.269,850 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அச்சுவர் முழுமையாகச் சேதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு